3rd Novembe 1958]

(*b*) if there has been any delay what is the cause for the same?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

Award of Medals to Harijan students

* 815 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of Harijan boys and girls of the South Arcot district who were awarded Silver medals for securing high marks in the S.S.L.C. Examinations held in 1956–57 and 1957–58; and

(*b*) the total value of those medals?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No medals have been awarded during these years.

(*b*) Does not arise.

* **816** *Q.*—SRI **P. G. MANICKAM :** கனம் பொதுமராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1957–58-ஆம் வருஷத்தில் எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்தலில் உயர்ந்த பட்ச மார்க்குகள் பெற்ற எத்தனை சென்னை மாகாண ஹரிஜன மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் தங்கம், வெள்ளி பதக்கங்கள் பரிசாக வழங்கப்பட்டன ?

(ஆ) 1958–59-ல் மேற்கண்ட பரிசுகள் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No medals have been distributed so far. Particulars have been called for from Collectors and on receipt of details the Director of Harijan Welfare will arrange to distribute the medals.

(*b*) Rs. 1,560.

SRI M. JAGANNATHAN : இந்த வருடங்களில் மெடல்கள் ஏன் வழங்கப்படவில்லை ?

THE HON SRI P. KAKKAN : ஜில்லா கலெக்டர்களிடம் விவரங்கள் கேட்டிருக்கிறோம். விவரங்கள் வந்த பிறகு மெடல்கள் கொடுக்கப்படும்.

SRI P. G. MANICKAM : **1958–59**-ம் ஆண்டிற்குப் பரிசுகள் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணத் தொகையானது இதே வருஷம் செலவழிக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : 1956–57, 1957–58 ஆகிய ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகள் இன்னும் செலவழிக்கப்படவில்லை. அந்தத் தொகைகளையே இந்த வருஷத்திற்குள் செலவழிக்கலாமா அல்லது இந்த வருஷத்திற்குப் பிறகும் செலவழிக்கலாமா என்பது பரிசீலனையில் இருந்து வருகிறது.

SRI K. B. S. MANI : இந்தப் பரிசுகள் **1956**-லிருந்து கொடுக்கப்படாமலிருப்பதாகத் தெரிகிறது. இதன் விளைவாகச் சர்க்கார் எந்த நோக்கத்துடன் இந்தத் திட்டத்தை ஆரம்பித்தார்களோ அந்த நோக்கம் வெற்றியடையாமலிருக்கிறது. பரிசுகள் கொடுக்கப்படாமலிருப்பது, ஜில்லாக் கலெக்டர்களின் தவறினாலா அல்லது அரசாங்கத்தின் அலட்சியத்தாலா ?

---

[a] **Printed as Appendix VII on page 480 infra.**